பேரூராட்சிகள் இயக்ககம்
22 JUL 2010
சென்னை

**சுருக்கம்**

பேரூராட்சிகள் நிர்வாகம் – மோட்டார் வாகனம் – கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக பயன்பாட்டில் இருந்த ஈப்பு (TN 38 G 0177) கழிவு செய்யப்பட்டதால் புதிய ஈப்பு வாகனம் (Bolero Lx Jeep-d) ரூ.5,05,033/–க்கு வாங்கிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை (ப) எண். 369** **நாள்: 21.7.2010**

**5, ஆடி, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்க:

1. கோவை மாவட்ட ஆட்சித்தலைவரின் ந.க.எண். 8054/2007/பே3, நாள் 12.3.2010.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.23591/2007/ஈ2, நாள் 21.5.2010.

******

**ஆணை:**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர் கோயம்புத்தூர் மண்டலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகப் பயன்பாட்டிலிருந்து 1998–ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட TN 38 G 0177 மகேந்திரா அண்ட் மகேந்திரா 540 ஈப்பு வாகனம் 14.5.2008–ஆம் தேதியில் 2,52,045 கி.மீ. தூரம் இயக்கப்பட்டுள்ளது என்றும், ஈப்பு வாகனத்திற்கு ரூ.20,436/–க்கு பழுது நீக்கம் செலவுகள் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் ஈப்பு வாகனம் மிகவும் பழுதடைந்த நிலையில் பராமரிப்பு செய்ய முடியாத காரணத்தால் அரசு தானியங்கி பணிமனை வல்லுநர்கள் ஆய்வின் பேரில், வாகனத்தை கழிவு செய்ய சென்னை மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்ததின் பேரில் மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை இயக்குநரின் கடிதத்தின்படி வாகனத்தை கழிவு செய்து சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, அரசாணை எண். 475, நிதித்துறை (உள்துறை–I) நாள் 04.9.1997–ல் குறிப்பிட்டுள்ளபடி, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரிடமிருந்து (Common Pool) வாகனங்கள் இருப்பு இல்லை (Vehicles Non availability Certificate) என்ற சான்றிதழை கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பெற்று அனுப்பியுள்ளார் என்றும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கோவை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில், கோவை மாவட்டத்திலுள்ள 44 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் மத்திய / மாநில அரசுத்திட்டப் பணிகளை ஆய்வு செய்யவும், நிலுவையிலுள்ள வரி இனங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், தற்போது அரசின் பிரதானப் பணியான உலகத்தமிழ் செம்மொழி மாநாடு தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், கோவை மாவட்டப் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அவசியமாக ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது என்றும் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், இந்த புதிய ஈப்பு வாகனம் (Bolero Lx Jeep-d) வாங்குவதற்கான விலைப்பட்டியலை (Proforma Invoice) M/s. Mahindra and Mahindra Limited, Mumbai-18 நிறுவனத்திடமிருந்து ரூ.5,05,033/– பெற்று அனுப்பியுள்ள செயற்குறிப்பின் மீது அரசின் ஆணை கோரியுள்ளார்.

2. பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகப் பயன்பாட்டில் இருந்த ஈப்பு (TN 38 G 0177) கழிவு செய்யப்பட்டுள்ளதால் புதிய ஈப்பு வாகனம் (Bolero Lx Jeep-d)

ரூ.5,05,033/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐந்தாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) வாங்கிட அரசாணை (நிலை) எண். 1229, உள்துறை, நாள் 21.12.2006–ல் வரையறுக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் வாகனம் வாங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஏற்று, ஆணை வெளியிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AJ மாவட்ட பேரூராட்சி அலுவலகங்கள் – 21 மோட்டார் வண்டிகள் – 01 வாங்குதல் (த.தொ.கு. 2515 00 001 AJ 2119)"

4. மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பேரூராட்சிகளின் இயக்குநர் பெற்று ஈப்பு வாங்குவதற்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011 திருத்த மதிப்பீடு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் செய்யப்படும். இதனை எதிர்நோக்கி பட்டியல்கள் இதர இனங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் பட்டியலை அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். 2010–2011 திருத்த மதிப்பீடு, இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் இதனை சேர்த்திட உரிய கருத்துருவை நிதி (ந.நி.(ம)கு.வ.) துறைக்கு அனுப்பும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அசா.எண். 37368/ந.நி.(ம)கு.வ./2010, நாள் 12.7.2010–ல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் பேரேடு எண். 441 (நானூற்று நாற்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:–
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.

நகல்:
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.
கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோயம்புத்தூர்.
மாநில முதன்மை கணக்காயர், சென்னை – 9/18/35.
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை – 83.
உள்ளாட்சி நிதிக்கணக்கு இயக்குநர், சென்னை – 108.
நிதி (ந.நி.(ம) கு.வ./ உள்–1/வரவு செலவு/பொது.2) துறை, சென்னை – 9.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.